சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**O.S. No. 99/2019**

2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை 1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியமாகிய **சந்திரசேகரன் DW1** வாக்குமுலம் 1869 ஆம் ஆண்டின் 44 வது சட்ட விதிகளின் படி / ஏற்பாட்டின்படி திரு.கே.சீனிவாசன்,எம்.ஏ.,எல்.எல்.எம்., சார்பு நீதிபதி நாகப்பட்டினம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பெயர்** | **சந்திரசேகரன்** | கிராமம் |
| வயது | | தாலுக்கா |
| தகப்பனார் பெய ர் | | ஜாதி |
| கணவர் பெயர் | | சமயம் |
| தொழில் | | |

04.01.2024

**முதல் விசாரணை**

நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். இதில் உள்ளது எனது கையெழுத்துத்தான். இதனை எனது சாட்சியத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய பிரார்த்திக்கிறேன். 21.11.2011 தேதியில் பாபு என்பவர் 3 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய சாசன உடன்படிக்கை அசல் ( 5,7 ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) **பி.வா.சா.ஆ. 1** ஆகும், எனது வாக்குமூலத்தை ஏற்றுக்கொண்டு தகுந்த உத்தரவு வழங்குமாறு தாழ்மையுடன் பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை**

**(வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைத்து உத்தரவிடப்படுகிறது)**